RPAD

அனுப்புநர்:

திரு.சு.ஸ்ரீ.பரத், எம்.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சம்பத் நகர், உழவர்சந்தை பின்புறம் கேட் ,
ஈரோடு -638 011.
ddtcperode@gmail.com
Ph: 0424 - 2258297.

பெறுநர் :

ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

நக.எண். : 772/2026 ஈமா 2

நாள். 20.04.2026

அய்யா,

பொருள் : உட்பிரிவு - ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு மாவட்டம் - ஈரோடு வட்டம்/மாநகராட்சி - ஈரோடு 'C'கிராமம் - க.ச.எண்.671/5A, 5C-இல் 0.36 3/4 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைஉட்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - தொடர்பாக.

பார்வை : 1. மனுதாரர் திரு.P.சதீஸ்குமார் அவர்களின் Online Application No. UR30Y39A நாள்:15.04.2025 மற்றும் நாள்.இல்லை (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.16.04.2026)

2.இவ்வலுவலக செயலாணை நக.எண். UR30Y39A/2025/TCP நாள்:22.05.2025

பார்வை 1-இல் கண்ட மனுதாரர் அவர்களின் Online விண்ணப்பம் நாள்.15.04.2025-இல் ஈரோடு மாவட்டம் /வட்டம் /மாநகராட்சி, Erode 'C' கிராமம், க.ச.எண்.671/5A, 5C-இல் 0.36 3/4 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு உட்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டு, பார்வை 2-இல் சுட்டிய கடிதம் மூலம் மனைஉட்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டு ஆணையாளர், ஈரோடு மாநகராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 1-இல் கண்ட மனுதாரர் அவர்களின் கடிதம் நாள்.16.04.2026-இல் நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்ட உத்தரவு கடிதத்தில் ரீ.ச.எண். 671/5A, 5C என்பதற்கு பதிலாக 651/5A, 5C யென குறிப்பிட்டு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது என்றும், எனவே உத்திரவு கடிதத்தில் 671/5A, 5C என குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டதை தொடர்ந்து, Single window online portal பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்கண்ட குடியிருப்பு உட்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டு, ஆணையாளர், ஈரோடு மாநகராட்சியால் 332 நாட்களுக்கு மேலான நிலையில் இறுதி ஒப்புதல் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

எனவே தங்களால் குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் போது செயலாணை கடிதத்தில் ரீ.சர்வே எண்.651/5A, 5Cயென குறிப்பிடப்பட்டுள்ளதை சர்வே எண்.671/5A, 5C யென திருத்தி வாசித்துக்கொண்டு அக்கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைபிடிக்கவேண்டும் என தெரிவித்து மேற்கண்ட குடியிருப்பு உட்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர்,
22/4/26.
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு.

22/04/2026

நகல்

1. Mr.P.Satheeskumar
   D.No.77, Gokul illam, Iraniyan street, Erode.
2. Tashildar,
   Erode Taluk, Erode.
3. Assistant Director,
   Department of Survey and Land records
   Collectorate office, Erode
4. The Chairman,
   Tamilnadu Real Estate Regularity Authority,
   No.1A, CMDA Tower II 1st floor
   Gandhi Irwin Bridge Road,
   Egmore, Chennai.
5. Superintending Engineer,
   Electrizing Distribution circle,
   Tamilnadu Generation and Distribution Corporation Limited,
   Erode, Erode District.